06.03.2025.

கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம்)

விழுப்புரம்.

**EA. 8/2022, EP. 26/2013 ACP.1/2010**

**எ.ம.சா.2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **குறிஞ்சி** | | |
| க/பெ | **வேல்முருகன்** | **மதம்** | |
| **கிராமம்** | **மிட்டாமண் டகப்பட்டு** | **தொழில்** | கிராம நிர்வாக அலுவலர், மிட்டாமண் டகப்பட்டு |
| **தாலுக்கா** | **விழுப்புரம்** | **வயது** | 43/2025 |
| **மாவட்டம்** | **விழுப்புரம்** | **தேதி** | |

இன்று சாட்சி உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

சாட்சி அழைப்பாணையின் பேரில் வரவழைக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

**நான் தற்போது மிட்டாமண்டகப்பட்டு கிராம நிர்வாக அலுவலராக பணி செய்து வருகிறேன். நீதிமன்ற அழைப்பாணையில் எனக்கு மிட்டாமண்டகப்பட்டு கிராமத்தில் எந்த சர்வே எண்ணில் உள்ள சொத்து குறித்து சாட்சியம் சொல்ல அழைப்பாணை வந்தது என்றால்** 167/7பி , 167/8 **ஆகியவைகளில் சம்மந்தப்பட்ட சொத்து சம்மந்தமாக சாட்சி சொல்ல அழைப்பாணை வந்தது. நான் மேற்படி சர்வே எண் தொடர்பான ஆவணங்களை கொண்டுவந்துள்ளேன். நான் சம்மனில் குறிப்பிட்டுள்ள சிட்டா, அ. பதிவேடு, புல வரைபடம் மற்றும் கணினி சிட்டா அ.பதிவேடு ஆகியவற்றை எடுத்துவந்துள்ளேன்.** 167/7பி , 167/8 **ஆகியவைகளில் சம்மந்தப்பட்ட**

சொத்துக்கள் எங்களது பதிவேடுகளின் படி கட்டிடமாக , அரிசி ஆலை என்று உள்ளது. இந்த சர்வே எண்ணுக்குள் தான் அரிசி ஆலை உள்ளதா என்று என்னால் அளந்து பார்க்காமல் கூற இயலாது. புல வரைபடப்படி 167/7 பி , 167/8 ஆகியவைகளில் சம்மந்தப்பட்ட நிலங்களில் தான் அரிசி ஆலை உள்ளது. ஆனால் இந்த முழு விஸ்தீரணத்தில் அரிசி ஆலை உள்ளதா என்று அளந்து பார்த்தால் தான் சொல்லமுடியும். இந்த புல எண்களுக்கு வடக்கில் மொட்டைய உடையார் த/பெ. சிவலிங்க உடையார் என்பவரின் பெயரில் உள்ளது. இந்த சொத்திற்கான பட்டா மொட்டைய உடையார் பெயரில் உள்ளது. அரிசி ஆலைக்கான உரிமம் யார் பெயரில் உள்ளது என்பதற்கான ஆவணம் என் வசம் இல்லை. 167/7 பி , 167/8 ஆகியவைகளில் சம்மந்தப்பட்ட நிலங்களில் மொத்த விஸ்தீரணம் என்ன என்றால் 167/7 பி 0.39.0 ஏர்ஸ் ஆகும். 167/8 0.26.5 ஏர்ஸ் ஆகும். தற்போது அரிசி ஆலை அங்கு இயங்கி கொண்டிருக்கிறதா என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை. என்னால் 167/7 பி 0.39.0 ஏர்ஸ் 4 எல்லைகள் கூற முடியுமா என்றால் கூறமுடியும். பாக்கம் கூட்டுரோடு - மடுகரை செல்லும் நெடுஞ்சாலைக்கு வடக்கு, மொட்டைய உடையார் நிலத்திற்கு மேற்கு , கணேசன் நிலத்திற்கு கிழக்கு, ராஜாங்கம் மொட்டைய உடையார் நிலத்திற்கு தெற்கு ஆகிவற்றில் உள்ளது. என்னால் 167/8 0.26.5 ஏர்ஸ் 4 எல்லைகள் கூற முடியுமா என்றால் கூறமுடியும். பாக்கம் கூட்டுரோடு - மடுகரை செல்லும் நெடுஞ்சாலைக்கு வடக்கு, ராமலிங்கம் வகையறா

நிலத்திற்கு மேற்கு, மொட்டைய உடையார் நிலத்திற்கு கிழக்கு , மொட்டைய உடையார் நிலத்திற்கு தெற்கு ஆகிவற்றில் உள்ளது. அந்த சொத்துக்களில் யாராவது கிரயம் வாங்கியிருந்தால் விண்ணப்பம் அளிக்கும் பட்சத்தில் பட்டா பெயர் மாற்றம் செய்ய பரிந்துரை செய்வோம்.

மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

நான் 01/08/2023 தேதியில் மிட்டாமண்டகப்பட்டு கிராம நிர்வாக அலுவலராக பணியில் சேர்ந்தேன். நான் ஒவ்வொரு புல எண்ணையும் ஒவ்வொரு போகத்திற்கும் பார்வையிட்டு சாகுபடி அடங்கல் கணக்கு தயார் செய்வேன் என்றால் சரிதான். தற்போது மனுசொத்தை சென்று பார்த்தேனா என்றால் எங்கள் கணக்கில் அரிசி ஆலை என்று இருப்பதால் உள்ளே சென்று பார்க்கவில்லை. நான் போகும் போது அரிசி ஆலை பூட்டி தான் இருந்தது. பட்டாதாரர் உயிருடன் இல்லை என்று தெரியவந்தது. மொட்டைய உடையார் நிலத்திற்கு மேற்கே என்று நான் சொன்ன இடத்திற்கு சர்வே எண். 167/8 ஆகும். கணேசன் இடத்திற்கு கிழக்கு என்று நான் சொல்லும் இடத்திற்கு புல எண். 167/ 7 ஏ ஆகும். ராஜாங்கம் நிலத்திற்கு தெற்கு என்று சொல்வது சர்வே எண். 167/5 ஏ 1 ஆகும். மொட்டைய நிலத்திற்கு தெற்கு என்று நான் சொல்வது சர்வே எண். 167/5 ஏ 2 மற்றும் 167/5 பி ஆகும். 167/8 – ல் சம்மந்தப்பட்ட நிலத்திற்கான செக்குபந்தியில் இராமலிங்கம் நிலத்திற்கு மேற்கே என்று நான் குறிப்பிட்டுள்ள சொத்திற்கான புல எண். 170/1 ஏ ஆகும். 167/8 – ல் சம்மந்தப்பட்ட நிலத்திற்கான செக்குபந்தியில் மொட்டைய

உடையார் நிலத்திற்கு கிழக்கே என்று நான் குறிப்பிட்டுள்ள சொத்திற்கான புல எண். 167/7 பி ஆகும். 167/8 – ல் சம்மந்தப்பட்ட நிலத்திற்கான செக்குபந்தியில் மொட்டைய உடையார் நிலத்திற்கு தெற்கே என்று நான் குறிப்பிட்டுள்ள சொத்திற்கான புல எண். 167/5 பி மற்றும் 169/ 1 ஆகும். மேற்படி 169/1 -ல் சம்மந்தப்பட்ட சொத்து இராமலிங்கத்திற்கு பாத்தியமானதாகும். 167/5 ஏ, 167/ 5 பி ஆகியவை என் அடங்கலில் கரும்பு என்று உள்ளது. இராஜாங்கம் இடத்தில் தான் கரும்பு உள்ளது. இராமலிங்கம் இடத்தில் சவுக்கு உள்ளது. 167/7 பி , 167/8 ஆகியவைகளில் சம்மந்தப்பட்ட நிலங்களை தவிர மற்ற சர்வே எண்களின் அடங்கல்களை பார்த்தேனா என்றால் 167/4 ஏ, 4 பி - ல் நெல் பயிர் இருந்து அறுவடை ஆகியுள்ளது. 168/5 ஏ 2, 168/5 பி இந்த 2- சர்வே எண்களும் அரிசி ஆலைக்கு தெற்கு பக்கத்தில் உள்ளது. அந்த அரிசி ஆலை இதற்குள்ளும் இருக்கலாம் என்பதால் வருவாய் துறை ஆவணங்களில் அந்த இடத்தை அரிசி ஆலை என்று குறிப்பிட படவில்லை. நான் சொல்வது போல மற்ற சர்வே எண்களில் அரிசி ஆலை இல்லை என்றும், 167/7 பி , 167/8 ஆகியவைகளில் சம்மந்தப்பட்ட நிலங்களில் தான் அரிசி ஆலை உள்ளது என்றும், நான் அனுமானத்தின் அடிப்படையில் மற்ற சர்வே எண்களிலும் அரிசி ஆலை உள்ளது என்று குறிப்பிடுவது சட்டப்படி தவறு என்றால் சரியல்ல. அரிசி ஆலையில் உள்ள சொத்தை நான் அளந்து பார்க்காமல் மற்ற சர்வே எண்களில் அரிசி ஆலை இருப்பதாக குறிப்பிடுவது தவறு என்றால் அளந்து பார்க்காமல்

கூறமுடியாது. 167/7 பி , 167/8 ஆகியவைகளில் சம்மந்தப்பட்ட நிலங்களில் தான் அரிசி ஆலை உள்ளது என்றும், நான் அனுமானத்தின் அடிப்படையில் மற்ற சர்வே எண்களிலும் அரிசி ஆலை உள்ளது என்று குறிப்பிடுவது சட்டப்படி தவறு என்றால் சரியல்ல. நாங்கள் அளந்து பார்க்காமல் எப்படி மொட்டைய உடையார் இடத்தில் அரிசி ஆலை உள்ளது என்று சொல்கிறோம் என்றால் அனுமானத்தின் அடிப்படையில் தான் சொல்கிறேன். வருவாய் ஆவணத்தின் அடிப்படையில் நிலமாகத்தான் உள்ளது என்றால் அளந்து பார்த்தால் தான் சொல்லமுடியும். நான் எடுத்து வந்த ஆவணத்தின் படி மேற்படி 167/7 பி , 167/8 ஆகியவைகளில் சம்மந்தப்பட்ட நிலங்களைத் தவிர 4 எல்லைகளில் உள்ள நிலங்களில் பயிர் சாகுபடி உள்ளது எ ன்றால் சர்வே செய்து அளந்து பார்த்தால் தான் கூறமுடியும்.